பக்கங்கள்: 08

# காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 ஆவணி 15 செவ்வாய்க்கிழமை 01.09.2020 கதிர் 166

## 444 கைதிகளுக்கு விடுதலை ஜனாதிபதி திடீர் நடவடிக்கை

சிறைச்சாலையில் ஏற்பட்டுள்ள நெருக்கடியினை குறைப்பதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதிரடி தீர்மானமொன்றை எடுத்துள்ளார்.

அந்த வகையில் நாடளாவிய ரீதியில் உள்ள சிறைச்சாலைகளில் சிறு குற்றங்களுக்காக தண்டனை பெறும் 444 கைதிகளை விடுதலை செய்வதற்கு 2

## ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவராக அங்கஜன் பதவியேற்பு





யாழ்ப்பாணம், செப் 01

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவராக அங்கஜன் இராமநாதன் தனது கடமைகளை இன்று உத்தியோக பூர்வமாக பொறுப்பேற்றுக் கொண்டார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு அதிகார சபையின் அலுவலகம் இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. 2

# '19' இல் கைவைக்காதீர்கள்! புதிய அரசமைப்பே அவசியம்

## சம்பந்தன் வலியுறுத்து



கொழும்பு,செப். 01

"அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான புதிய அரசு கைவைக்க வேண்டிய அவசியமில்லை. புதிய அரசமைப்பே தேவைப்படுகிறது."

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தெரிவித்தார். 2

## இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக எம்.பி. ஆசனத்துக்குப் 'பூ'வா? 'தலை'யா?



மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள பிரேமலால் ஜயசேகரவுக்கு எம்.பியாகப் பதவியேற்க முடியாது என்று சட்டமா அதிபரினால் நீதி அமைச்சருக்கும் நாடாளுமன்ற செயலாளருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி பிரேமலால் ஜயசேகரவின் ஆசனத்துக்கு யாரை நியமிப்பது என்பது தொடர்பாக 'பூவா?, 'தலை'யா? போட்டு முடிவு செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

அப்படி நடந்தால் இலங்கைத் தேர்தல் வரலாற்றில் எம்.பி. ஒருவர் நாணயச்சுழற்சி மூலம் தெரிவு செய்யப்படும் முதலாவது சந்தர்ப்பமாக இது அமையும். 2

## நாவாந்துறைப் பகுதியில் இன்று பொலிஸ் தேடுதல்

யாழ்ப்பாணம் – நாவாந்துறை, பொம்மைவெளிப் பகுதியில் இன்று (செவ்வாய்க்கிழமை) காலை முதல் இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் இணைந்து சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

சுமார் 2 மணித்தியாலயத்திற்கு மேலாக இந்த சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது. 2

## துணைப் பிரதமர் பதவி: அப்படி ஒன்றும் இல்லை

### நீதி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, செப். 01

துணைப் பிரதமர் பதவியொன்றை உருவாக்குவது குறித்து இதுவரை கவனம் செலுத்தப்படவில்லை என்று நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

ஊடகமொன்றுக்குக் கருத்து வெளியிட்டிருக்கும் அவர், அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தைத் திருத்துவது குறித்தும், புதிய அரசமைப்பு உருவாக்கல் தொடர்பிலும் அரசு கவனம் செலுத்துகின்றது என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில், துணைப் பிரதமர் பதவி குறித்தும் இதுவரை யோசனை கூட முன்வைக்கப்படவில்லை என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

## 19 இற்கு சமாதி கட்டப்பட்டால் இலங்கை ராஜபக்ஷ யுகம்தான்

### ரணில் விக்கிரமசிங்க கவலை



கொழும்பு, செப். 01

அரசமைப்பின் 19ஆவது திருத்தம் இல்லாதொழிக்கப்பட்டால் இலங்கை ராஜபக்ஷ யுகமாகவே மாறும். இந்தக் கொடூர நிலைமைக்கு நாட்டையும் நாட்டு மக்களையும் நேசிக்கும் எவரும் ஆதரவு வழங்கக்கூடாது.

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தலில் நாட்டு மக்கள் ஆட்சி மாற்றத்தை விரும்பியிருக்கலாம். ஆனால், அவர்கள் குடும்ப ஆட்சியையும், சர்வாதிகார ஆட்சியையும் ஒருபோதும் விரும்பவில்லை. 2

## மின்னல் தாக்கி மனைவி சாவு; கணவன் வைத்தியசாலையில்!

மின்னேரியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஜயந்திபுர பிரதேசத்தில் மின்னல் தாக்கியதில் மனைவி உயிரிழந்துள்ளார்; கணவன் படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

வயலில் அறுவடை வேலையில் ஈடுபட்டிருந்த தம்பதியினர் மீது மின்னல் தாக்கிய நிலையில், அவர்கள் இருவரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இவர்களில் ஜயந்திபுர வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட மனைவி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஜயந்திபுர பிரதேசத்தைச் சேர்ந்த 43 வயதுடைய குடும்பப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, மின்னல் தாக்கி 2

## மைத்திரிக்குப் பதவி சு.க. கோரவில்லை அரச தரப்பே வழங்குவதாகக் கூறியதாம்!

### அக்கட்சியின் செயலாளர் தயாசிறி தகவல்

கோட்டா – மஹிந்த தலைமையிலான அரசாங்கத்தினால் கொண்டுவரப்படும் புதிய அரசமைப்பிற்கு முழுமையான ஆதரவை வழங்கவுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அறிவித்துள்ளது.

கட்சித் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிக்கு எந்தவித பதவியையும் அரச தரப்பிலிருந்து தாம் கோரவில்லை என்று தெரிவித்த சுதந்திரக் கட்சி, அரச தரப்பே பதவியொன்றை வழங்குவதாக உறுதியளித்திருந்தது என்றும் தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 69ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கொழும்பு பெல்லன்வில ராஜமகா விகாரையில் நாளைய தினம் 2

## கடத்தப்பட்டுப் பத்து வருடங்கள் கடந்தும் எக்னலிகொடவுக்கு நீதி கிடைக்கவில்லை

### மனைவி சந்தியா கவலை




எனது கணவரான பிரபல கேலிச் சித்திர ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொட கடத்தப்பட்டு 10 ஆண்டுகள் கடந்த போதிலும் நீதிமன்றத்தில் இது வரை நீதி கிடைக்காமையிட்டு கவலையடைகின்றேன்.

- இவ்வாறு பிரகீத் எக்னலிகொடவின் மனைவி சந்தியா எக்னலிகொட தெரிவித்தார். 2

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



## '19' இல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

19ஆவது திருத்தத்தால்தான் கடந்த ஆட்சியில் நாடு ஜனநாயக வழியில் பயணித்தது. இடையில் நடந்த சதிப் புரட்சியால் 52 நாள்கள் தளம்பல் ஏற்பட்டது. எனினும், உயர்நீதிமன்றம் அந்தத் தளம்பல் நிலைக்கு முடிவு கட்டி யது.

புதிய அரசும் ஜனநாயக வழியில் பயணிக்க வேண்டும் என்றே நாம் விரும்புகின்றோம். 19ஆவது திருத்தத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதை நாம் விரும்பவில்லை.

அரசியல் தீர்வுக்கும் அபிவிருத்திக்கும் வழிவகுக்கும் புதிய அரசமைப்பையே நாம் விரும்புகின்றோம். அதை இந்த அரசு உடன் கொண்டுவர வேண் டும் – என்றார்.

## மின்னல் தாக்கி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யதில் படுகாயமடைந்த அவரது கணவர் பொலனறுவை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

சம்பவம் தொடர்பில் மின்னேரியாப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஒருங்கிணைப்புக் குழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். மாவட்ட அரச அதிபர் க.மகேசன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தவிசாளரும், யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைவருமான அங்கஜன் இராமநாதன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு அலுவலகத்தை திறந்து வைத்தார்.

தொடர்ந்து சர்வமத தலைவர்களின் ஆசீர்வாதத்துடன் அரச அதிபர் முன்னிலையில், யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைவரான அங்கஜன் இராமநாதன் தனது கடமைகளையும் உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றார்.

நிகழ்வில் மாவட்ட செலயக உத்தியோகத்தர்கள், திணைக்களங்களின் ஆணையாளர் மற்றும் செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள் பொதுமக்கள் என பலர் கலந்துகொண்டனர்.

## 444 கைதிகளுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு விடுதலை செய்யப்படும் கைதிகளில் 83 பேர் வெலிக்கடை சிறைச்சாலையை சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

தண்டப்பணம் செலுத்த முடியாமல் சிறு தவறுகளுக்காக சிறையில் உள்ளவர்கள் மற்றும் 65 வயதிற்கு மேற்பட்ட சிறு தவறுகளுக்காக சிறையில் உள்ளவர்கள் இவ்வாறு விடுதலை செய்யப்படவுள்ளனர்.

கொலை, கொள்ளை, கற்பழிப்பு மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் போன்ற தவறுகளுடன் தொடர்புடைய எவருக்கும் பொது மன்னிப்பு வழங்கப்படவில்லை என சிறைச்சாலைகள் ஆணையாளர் துஷார உப்புல் தெனிய தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் நாடளாவிய ரீதியில் உள்ள 29 சிறைச்சாலைகளில் சிறை வைக்கப்பட்டுள்ள சிறு குற்றங்களுக்காக தண்டனை பெற்றுவரும் 18 பெண்கள் உள்ளிட்ட 444 கைதிகள் விடுதலை செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 19 இற்கு சமாதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தை இல்லாதொழிக்கவே நாட்டு மக்கள் தமக்கு ஆணை வழங்கியுள்ளனர் என்று ராஜபக்ஷவினர் பொய்யுரைக்கின்றனர். இதை நாம் சொல்லித்தான் தெரியவேண்டிய அவசியமில்லை.

19ஆவது திருத்தத்தை இல்லாதொழிக்க ஆதரவு வழங்கினால் அது ராஜபக்ஷக்களின் மன்னர் ஆட்சிக்கே வழிவகுக்கும். எனவே, இதை உணர்ந்து மக்கள் பிரதிநிதிகள் செயற்பட வேண்டும் – என்றார்.

## நாவாந்துறைப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது, பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்கள் மற்றும் கஞ்சா, ஹெரோயின் விற்பனையாளர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும் கஞ்சா மற்றும் ஹெரோயின் என்பன மீட்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து கைது செய்யப்பட்டவர்கள் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்

## மைத்திரிக்குப் பதவி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசேட நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன.

இது குறித்து தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பில் இன்றைய தினம் நடைபெற்றது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கட்சியின் செயலாளர் தயாசிறி ஜயசேகர கருத்துத் தெரிவிக்கையில் –

19ஆவது திருத்தத்திற்கான வாக்கெடுப்பில் நான் நாடாளுமன்றத்தில் இருக்கவில்லை. எவ்வாறாயினும் கடந்த 05 வருட காலத்தில் சுயாதீன ஆணைக் குழுக்களின் செயற்பாடுகளால் சட்டரீதியான பிரச்சினைகள் ஏற்பட்டன. ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருக்கு இடையே அதிகார மோதல் இடம்பெற்றது.

நாட்டிற்குள்ளும் பல பிரச்சினைகள் ஏற்பட்டன. சபாநாயகர், இராணுவத் தளபதி, புலனாய்வுப் பிரிவினர், பொலிஸ்மா அதிபரை அழைத்து விசாரணை செய்யப்பட்டிருக்கவில்லை. ஆனால் கடந்த ஆட்சியில் அதுவும் இடம்பெற்றது. மூன்று அதிகார நிலைகள் ஏற்பட்டன.

ஆகவே தனிநபருக்காக 19ஆவது திருத்தத்தை நீக்க நாங்கள் ஆதரவளிக்கவில்லை. ஆரம்பத்தில் இருந்தே இந்தத் திருத்தத்தை இரத்துச் செய்ய வேண்டும் என்கிற நிலைப்பாட்டில் சுதந்திரக் கட்சி இருக்கின்றது. எனவே புதிய அரசமைப்புக்கு நாங்கள் எமது ஆதரவை அரசாங்கத்திற்கு வழங்குவோம்.

இந்த நிலையில் இதுவரை எப்படியான திருத்தம் செய்யப்போகின்றது என்றவிடயம் தெரியவில்லை. அதற்கான திருத்த வரைவு சமர்பிக்கப்பட்டதன் பின்னர் கட்சி என்ற வகையில் கூடி ஆராய்வோம். நாங்கள் இந்தப் புதிய அரசமைப்பு உருவாக்கத்தின் போது கட்சி என்கிற வகையில் பதவிகளைக் கூட கேட்கவில்லை.

கட்சித் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அமைச்சுப் பதவிக்குப் பதிலாக வேறொரு பதவியை வழங்குவதாக அரச தரப்பு எம்முடன் நடத்திய பேச்சில் கூறியிருந்தது. இது எங்களால் பேசப்பட்ட விடயமல்ல. கட்சித் தலைவரும் பதவியை கோரவில்லை. – எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கடத்தப்பட்டுப் பத்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பிரகீத் எங்கோ ஒளித்தில் உயிரோடு இருக்கின்றார் என்று நான் அன்றும் கூறினேன். இன்றும் அந்த நம்பிக்கையுடன்தான் இருக்கின்றேன். அவரை நான் உயிர்வாழ வைத்துக் கொண்டிருக்கின்றேன்.

பிரகீத் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவத்தை காணாமல் போக விடாமல் பார்த்துக்கொள்வதுதான் எனது ஒரே இலக்கு. அவரை நான் உயிர் வாழ வைத்துக்கொண்டிருக்கின்றேன் – என்றார்.

இதேவேளை, கார்டூன்கள் வரைவதற்காக பிரகீத் எக்னலிகொட பயன்படுத்திய பொருட்களையும், நீரிழிவு நோய்க்காக அவர் எடுத்துக்கொண்ட மருந்துகளையும் பிரகீத் எக்னலிகொடவின் நினைவுகளாக சந்தியா பாதுகாத்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# வறட்சியால் நீர் விநியோகத்துக்குப் பாதிப்பு: சிக்கனமாகப் பயன்படுத்துமாறு அறிவுறுத்து

கொழும்பு, செப். 01

இலங்கையில் கடந்த பல மாதங்களாகப் போதுமான மழை வீழ்ச்சி கிடைக்காமையால் பல பிரதேசங்களில் வறட்சி நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதனால் நீர் விநியோகத்துக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது எனத் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

மக்களுக்குத் தேவையான நீரை விநியோகிக்கும் பிரதான ஆறுகள் உள்ளிட்ட நீர் நிலைகளில் நீர் மட்டம் குறைவடைந்துள்ளமையால், பல பிரதேசங்களில் நீர் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என அந்தச் சபை குறிப்பிட்டுள்ளது.

குறிப்பாக உயரமான இடங்களில் உள்ள வீடுகளுக்கான நீர் விநியோகத்துக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது எனவும், அந்தப் பகுதிகளுக்குக் குறைந்த அழுத்தத்துடனேயே நீர் விநியோகம் இடம்பெற்று வருகின்றது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துமாறு நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை பாவனையாளர்களைக் கேட்டுக் கொண்டுள்ளது.

# கட்டாரில் இருந்து 398 பேருடன் இலங்கை வந்த விமானத்தில் 54 பேருக்குக் கொரோனா வைரஸ்

கொழும்பு, செப். 01

கட்டாரில் இருந்து வந்து தனிமைப் படுத்தப்பட்டிருந்த மேலும் 22 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக் களம் இன்று தெரிவித்துள் ளது.

கட்டாரில் இருந்து வந்த 32 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் நேற்றுத் தெரிவித்திருந்தது.

அதற்கமைய கட்டாரில் இருந்த வந்த 54 பேர் நேற்று மாலை முதல் இன்று காலை 10 மணி வரை வரையில் கொரோனா வைரஸ் தொற்று டன் அடையாளம் காணப்பட் டுள்ளனர்.

கடந்த இரண்டு நாள்களுக்கு முன்னர் 398 பேருடன் கட்டாரில் இருந்து இலங்கைக்கு அந்த விமானம் வந்திருந்தது. அதில் வந்த 54 பேருக்கே கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

# திருகோணமலை சிறைக்குள் பொதி வீசிய இருவர் சிக்கினர்

திருகோணமலை விளக்கமறியல் சிறைச்சாலைக்குள் தடை செய்யப்பட்ட பொருள்களை வீசியவர்கள் எனக் கூறப்படும் இருவரை இம்மாதம் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை பதில் நீதிவான் எம்.டி.லக்மால் ஜெயலத் இன்று உத்தரவிட்டார்.

திருகோணமலை, அக்போபுர பகுதியைச் சேர்ந்த 22 மற்றும் 20 வயதுடைய இருவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் திருகோணமலை விளக்கமறியல் சிறைச்சாலைக்குள் தடைசெய்யப்பட்ட சட்டவிரோதமான கேரள கஞ்சா, ஹெரொயின், புகையிலை, பீடி, அலைபேசி பற்றரி போன்ற பொருள்களை சிறிய பந்து வடிவில் சுரை செய்து வீசிய வேளையில் சிறைச்சாலை அதிகாரிகளால் பிடிக்கப்பட்டு திருகோணமலை துறைமுக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

பொலிஸார் சந்தேக நபர்களை திருகோணமலை பதில் நீதிவானின் இல்லத்தில் ஆஜர்படுத்திய போதே அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# 119 இலக்கத்துடன் 'விளையாடியவர்' நோர்வூட்டில் கைது!

பொலிஸ் அவசர அழைப்புப் பிரிவுக்கு தொடர்ச்சியாக அழைப்பை மேற்கொண்டு பொய்யான முறைப்பாடுகளை முன்வைத்துவந்த நபரொருவர் கடந்த சனியன்று மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

நோர்வூட், சென்ஜோன்டிலரி மேற்பிரிவு தோட்டத்தை சேர்ந்த நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நபர் '119' என்ற இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி பல தடவைகள் பொய்யான முறைப்பாடுகளை முன்வைத்துள்ளார் என்று கூறப்படுகின்றது. இதனையடுத்து இது தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்த நோர்வூட் பொலிஸார், நீதிமன்றத்தின் அனுமதியுடன் அவரைக் கைது செய்தனர். அவரிடமிருந்து தொலைபேசியும் மீட்கப்பட்டுள்ளது.

கைதானவரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளைப் பொலிஸார் செய்திருந்தனர்.

## இலங்கை வரலாற்றில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2015 ஆம் ஆண்டு அரசியல் கூட்டமொன்றில் இடம்பெற்ற கொலைச் சம்பவம் தொடர்பில் கடந்த ஜூலை மாதம் பிரேமலால் ஜயசேகரவுக்கு இரத்தினபுரி மேல் நீதிமன்றத்தால் மரண தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும் அவரின் பெயர் ஏற்கனவே பொதுத்தேர்தலுக்கான வேட்பு மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தமையால் அவர் சிறையில் இருந்தவாரே போட்டியிட்டார்.

இரத்தினபுரி மாவட்டத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியில் அதிகூடிய விருப்பு வாக்குகளையும் பெற்று அவர் வெற்றி பெற்றிருந்தார்.

எனினும், மரணதண்டனைக் கைதி என்பதனால் அவரால் எம்.பியாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொள்ள முடியாத நிலைமை உருவாகியுள்ளது.

இவ்வாறான நிலைமையில் இரத்தினபுரி மாவட்டத்தில் போட்டியிட்ட ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் வேட்பாளர்களில் வெற்றி பெறாத மற்றும் வாக்கு எண்ணிக்கையில் வெற்றி பெற்ற வேட்பாளர்களுக்கு அடுத்த நிலையிலுள்ள ஒருவருக்கு ஜயசேகரவின் எம்.பி. ஆசனம் வழங்கப்பட வேண்டும்.

ஆனால், தேர்தல் முடிவுகளுக்கமைய கூடுதலான வாக்குகளைப் பெற்று பட்டியலில் அடுத்த நிலையிலுள்ள ரஞ்சித் பண்டார என்பவரும், ரோஹன கொடிதுவக்கு என்பவரும் 53 ஆயிரத்து 261 என்ற சம அளவான வாக்குகளைப் பெற்றுள்ளமையால் இவர்களில் ஒருவரையே அந்த ஆசனத்துக்குத் தெரிவு செய்ய வேண்டியுள்ளது.

இது தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்துள்ள தேர்தல்கள் ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர், இவ்வாறான நிலைமை ஏற்படும்போது நாணயச்சுழற்சியில் 'பூவா?, 'தலை'யா? போட்டே ஆசனத்துக்குரியவர் தெரிவு செய்யப்படுவார் என்று குறிப்பிட்டுள்ளார்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ‘பயங்கரவாதி’ விக்னேஸ்வரன்

உயர்நீதிமன்ற நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் நாடாளுமன்றத்தில் தமது கன்னி உரை மூலம் ஆரம்பித்து வைத்த சர்ச்சை இப்போதைக்குத் தணியப் போவது போன்று தெரியவில்லை. அது இன்னும் சூடு பிடித்து பலத்த சர்ச்சைகளை – வாதப் பிரதிவாதங்களை – ஏற்படுத்தும் என்றே தோன்றுகின்றது.

தமிழர் தரப்பின் போராட்டக் கருத்தியலை இன்னும் விவரமாக – இன்னும் விளக்கமாக –முக்கியமான ஆதாரங்களோடு – நீதியரசர் விக்னேஸ்வரன் வெளிப்படுத்த முயலுகின்றமையால், அந்த வாதத்தில் இருக்கும் உண்மைச் சூடு தாங்க முடியாது தென்னிலங்கை பௌத்த, சிங்கள பேரினவாதம் மேலும் கொதித்தெழுந்து சீறப் போவது நிச்சயம்.

தம்முடைய கருத்தியல் நிலைப்பாட்டின் முக்கிய அங்கமாகத் தமிழீழ விடுதலைப் புலிகளின் உருவாக்கத்துக்கான காரணத்தை அம்பலப்படுத்த முயன்றிருக்கின்றார் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன்.

கொழும்பு சிங்கள ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியில் இந்த விவகாரத்தை வெளிப்படுத்தியிருக்கின்றார் அவர்.

*“தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஒரு பயங்கரவாத அமைப்பாக ஏற்றுக் கொள்ள முடியாது. தங்களின் சமூகத்துக்கு அநீதி இழைக்கப்பட்டமையால் அவர்கள் ஆயுதம் ஏந்திப் போரிடத் தூண்டப்பட்டனர்.”* – என்று தெளிவுபடுத்துகின்றார் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன்.

*“அப்படி விடுதலை புலிகள் ஆயுதம் ஏந்துவதற்குத் தூண்டப்பட்டமைக்குக் காரணம் இலங்கையை ஆட்சி செய்த ஆட்சியாளர்களே.”* – என்றும் கூறும் விக்னேஸ்வரன், அதன் மூலம் ஒரு விடயத்தை வெளிப்படுத்தத் துணிகின்றார்.

அது, இந்த நாட்டில் சிறுபான்மையினரான தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட மிகக் கொடூரமான ‘அரச பயங்கரவாதம்’ பற்றியாகும்.

அரச பயங்கரவாதத்தை முன்னெடுத்தவர்கள் இந்த நாட்டில் புலிப் பயங்கரவாதமே இருந்தது என்ற பாணியில் ‘ரீல்’ விடப்பார்க்கின்றனர் என்பதையே நீதியரசர் விக்னேஸ்வரன் அம்பலப்படுத்த முயலுகின்றார்.

விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் என்போர் புலிகள் அமைப்புப் போன்ற ஆயுதப் போராட்ட சக்திகள் தமிழர் மத்தியில் இருந்து தோற்றம் பெற்ற காலச்சூழலையும் பின்னணியையும் புரிந்து கொள்ள வேண்டும். அதனைப் புரிந்து கொண்டால் நீதியரசர் விக்னேஸ்வரனின் மேற்படி கூற்றுக்குள் பொதிந்து கிடக்கும் ஆழமான உண்மையைத் தாமாகவே உணர்ந்து கொள்வர்.

முப்பது ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ்த் தலைவர்கள் கடைப்பிடித்து வந்த சாத்வீக முறையிலான அரசியல் போராட்டங்களின் நீதியும் நியாயமும் தென்னிலங்கை சிங்கள, பௌத்த பேரினவாதிகளின் காதுகளில் விழவேயில்லை.

ஒரு புறம் ஆயுதப் படையினரின் அடக்குமுறையையும், மறுபுறம் அரச இனவாத ஒடுக்குமுறையையும் எதிர்கொண்ட புரட்சிகரமான சிந்தனை மிக்க தமிழ் இளைஞர்கள் காந்தியத் தத்துவத்தில் நெறிக்கப்பட்ட சாத்வீக அரசியல் முறைமை சாத்தியப்படவே மாட்டாது என்பதை உணர்ந்து, அதைக் கைவிடுவதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

ஒரு பக்கத்தில், நீதிகேட்டு அஹிம்சை வழியில் போராடிய மிதவாதத் தமிழ்த் தலைமைகளைக் கவனத்தில் எடுக்கவே சிங்கள, பௌத்த தலைமைகள் தயாராக இருக்கவில்லை.

மறுபக்கத்தில், பேரினவாத அரச அடக்குமுறையும், அரச படைகளின் ஆயுதம் தரித்த அரச பயங்கரவாத ஒடுக்குமுறையும் தீவிரமடைந்தன.

இந்தக் காரணிகளே தமிழ் இளைஞர்களை ஆயுதம் தாங்கிய வன்முறைப் பாதையை நோக்கி நெட்டித் தள்ளின.

அடக்கி, ஒடுக்கப்படும் தமது சமூகத்தைக் காப்பாற்றி, தங்கள் இருப்பியலை நிலைநிறுத்தி, தங்கள் இனத்துக்கும், தமது மக்களுக்கும் நீதி, நியாயம், சமத்துவம், கௌரவமான வாழ்க்கை முறை மற்றும் வாழ்வியல் உரிமைகளைப் பெற்றுக் கொடுக்க ஆயுதம் தரித்த வன்முறைப் போராட்டத்தைத் தவிர, வேறு மார்க்கம் இல்லை என்ற கட்டாயத்தை தென்னிலங்கை ஆட்சிப் பீடம் தனது அரச பயங்கரவாதம் மூலம் தமிழ் இளைஞர்களுக்கு ஏற்படுத்தி நின்றது.

இந்த வரலாற்று உண்மையைத்தான் – யதார்த்தத்தைதான் – சுருக்கமான வார்த்தைகளில் எடுத்துரைத்திருக்கின்றார் நீதியரசர் விக்னேஸ்வரன்.

தென்னிலங்கையில் தமிழர்களின் அரசியல் நிலைப்பாட்டுக்கு எதிராகப் பேரினவாதத் திமிரோடு கூச்சலிடுகின்ற பலருக்கும் தமிழர்களின் போராட்டத்தின் பின்னால் புதைந்து கிடக்கம் நியாயங்களோ, அந்தப் போராட்டம் கட்டவிழக் காரணமாக இருந்த கள யதார்த்தங்களோ தெரியாது என்பதுதான் உண்மை.

அதைப் புரிய முற்பட்டால், அரச பயங்கரவாதத்தை எதிர்கொள்வதற்கு வேறு வழியின்றி ஆயுதம் தாங்கும் கட்டாயத்துக்குத் தமிழ் இளைஞர்கள் தள்ளப்பட்டனர் என்ற நியாயம் தானாகப் புரிந்துவிடும்.

அரசுப் படைகள் புரிந்த ‘பயங்கரவாதத்தை’ ஏற்கவோ, அங்கீகரிக்கவோ விரும்பாமல், இனவாத திமிரில் இருக்கும் தென்னிலங்கை மேலாண்மைப் போக்குத் தரப்புகளுக்கு தமிழர் தரப்பின் நியாயம் புரியப் போவதில்லை. அதனால் நீதியரசர் விக்னேஸ்வரனும் ஒரு ‘பயங்கரவாதி’யாகத்தான் அவர்களின் கருத்தில் படுவார். அது தவிர்க்க முடியாதது.

# ‘19’ ஐ ஒழித்து இலங்கையை நாசமாக்க இடமளியாதீர்கள்!

### ஆளும் – எதிரணி எம்.பிக்களிடம் சந்திரிகா வேண்டுகோள்



கடந்த நல்லாட்சியில் எத்தனையோ தியாகங்களுக்கு மத்தியில்தான் அரசமைப்பின் 19ஆவது திருத்தம் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டது. எனவே, அந்தத் திருத்தத்தை இல்லாதொழித்து நாட்டை நாசமாக்கும் ராஜபக்ஷக்களின் திட்டத்துக்கு ஆளுந்தரப்பு மற்றும் எதிர்த்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் இடமளிக்கக் கூடாது.

- இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தை முற்றாக வலுவிழக்கச் செய்யும் வகையில் 20ஆவது திருத்தத்தை நிறைவேற்றும் வேலைத்திட்டத்தில் ராஜபக்ஷக்கள் களமிறங்கியுள்ளனர்.

குடும்ப அரசியல், எதேச்சதிகாரம் ஆகியவற்றின் ஊடாக நாட்டை ஆட்சி செய்யும் நோக்குடனேயே ஜனாதிபதியும், பிரதமரும் கங்கணம் கட்டிச் செயற்படுகின்றனர்.

இந்தக் கேவலமான நடவடிக்கைகளுக்கு நாட்டு மக்களின் பிரதிநிதிகளாக நாடாளுமன்றம் சென்றுள்ள எவரும் ஆதரவு வழங்கக்கூடாது. இது எனது அன்பான வேண்டுகோளாகும் - என்றார்.

# ‘19’ திருத்தத்தை முழுமையாக இல்லாதொழிக்க இடமளியோம்

### சஜித் திட்டவட்டம்



அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தில் தடங்கலாக உள்ள சில விடயங்களை எமது அனுமதியுடன் திருத்தம் செய்து 20ஆவது திருத்தத்தை அரசு நிறைவேற்ற அரசுக்கு ஒத்துழைப்பு வழங்குவோம். அதைவிடுத்து எமது அனுமதியின்றி 19ஆவது திருத்தத்தில் எதிர்மறையான திருத்தங்களை அரசு செய்யவோ அல்லது அதை முற்றாக இல்லாதொழிக்கவோ நாம் ஒருபோதும் இடமளிக்க மாட்டோம்.

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

19ஆவது திருத்தத்தின் பிரகாரம் ஜனாதிபதியின் பதவிக் காலமும், நாடாளுமன்றத்தின் பதவிக் காலமும் 5 வருடங்களாக இருக்க வேண்டும். அதேவேளை, ஒருவர் ஜனாதிபதியாக இரண்டு தடவைகள் மாத்திரமே பதவி வகிக்க முடியும். இந்த வரையறைகளில் மாற்றம் வரக்கூடாது.

அதேவேளை, அரசமைப்பு பேரவை, சுயாதீனக்குழுக்கள் என்பவற்றில் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது.

நிறைவேற்றுத்துறை, சட்டவாக்கத்துறை ஆகியவற்றுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களிலும் மாற்றம் கொண்டுவர முடியாது.

இரட்டைப் பிரஜாவுரிமையுடைய ஒருவர் இந்த நாட்டில் நடைபெறும் எந்தத் தேர்தல்களிலும் போட்டியிட முடியாது என்ற விதிமுறையிலும் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது.

அதாவது ராஜபக்ஷக்களின் சுகபோக அரசியலை மையப்படுத்தி 19ஆவது திருத்தத்தில் மாற்றத்தை ஏற்படுத்தவோ அல்லது அதை இல்லாதொழிக்கவோ நாம் இடமளிக்கமாட்டோம் - என்றார்.

# ‘19’ இற்கு அடியோடு முடிவு கட்டுவோம்!

### மஹிந்த சூளுரை



கொழும்பு, செப். 01

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கொள்கை விளக்கத்தின் பிரகாரம் அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தை முழுமையாக இல்லாதொழிப்போம்.

– இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

ராஜபக்ஷக்களை அரசியலில் இருந்து ஒதுக்கும் வகையிலேயே அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தை நல்லாட்சி அரசு நிறைவேற்றியிருந்தது. இதுதான் உண்மை நிலைவரம்.

இந்தத் திருத்தத்தால் நாடோ அல்லது மக்களோ எவ்வித நன்மையும் அடையவில்லை. மாறாக கடந்த நான்கரை வருடங்களாக நாட்டு மக்கள் பெரும் அவலங்களைச் சந்தித்தார்கள். ஊழல், மோசடிகள் தலைவிரித்தாடி நாட்டின் பொருளாதாரம் அதள பாதாளத்துக்குச் சென்றிருந்தது.

இந்த அவலநிலைக்கு முடிவுகட்டவே நாட்டு மக்கள் எமது கையில் மீண்டும் அதிகாரத்தைத் தந்துள்ளார்கள். எனவே, ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் காலங்களில் நாட்டு மக்களுக்கு நாம் வழங்கிய வாக்குறுதிக்கமைய அரசமைப்பின் 19ஆவது திருத்தத்துக்கு முடிவு கட்டியே தீருவோம். இந்த நிலைப்பாட்டில் ஜனாதிபதியும் உறுதியாக உள்ளார். அவர் தனது கொள்கை விளக்க உரையில் இதைத் தெளிவாக எடுத்துரைத்துள்ளார் – என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# இந்தியா - ரஷ்யா இடையே கூட்டுக் கடற்படைப் பயிற்சி

## 4, 5 திகதிகளில் அந்தமான் கடலில்



இந்தியா, ரஷ்யா இடையேயான கூட்டுக் கடற்படைப் பயிற்சி வரும் 4 மற்றும் 5 ஆம் திகதிகளில் நடக்க உள்ளது.

பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் ரஷ்யா செல்லும் காலகட்டத்தில் அந்தமான் கடல் பகுதியில் இந்தப் பயிற்சி நடக்கவிருப்பதாக கடற்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தியா மற்றும் ரஷ்யா சார்பில் தலா 3 போர்க்கப்பல்கள் பங்கேற்க இருக்கின்றன எனக் கூறப்படுகிறது.

இதே மாதத்தில் ரஷ்யாவின் கவ்காஸ் பகுதியில் நடக்க உள்ள பன்னாட்டு இராணுவ பயிற்சியில் பங்கேற்பதை இந்தியா தவிர்த்துள்ளது.

இந்த நிலையில் ரஷ்யாவுடனான உறவை மேம்படுத்துவதில் அந்தமான் கடற்படைப் பயிற்சி கைகொடுக்கும் என்றும் கடற்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# இந்தியாவுடன் எல்லைப் பிரச்சினையை பேசித் தீர்க்கத் தயார் என்கின்றது சீனா



இந்தியாவுடனான எல்லைப் பிரச்சினையை பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க சீனா தயாராக இருப்பதாக கூறி உள்ள சீன வெளியுறவு அமைச்சர் வாங் யி, ஆனால், அங்கு பதற்றம் ஏற்படுவதற்கு இந்தியாவே காரணம் எனவும் தெரிவித்துள்ளார்.

கிழக்கு லடாக்கில், யதார்த்த கட்டுப்பாட்டு எல்லைக்கு அருகே, பாங்கோங் ஏரியின் தெற்கு கரையிலும், ரெக்கின் கணவாயிலும் புதிதாக பதற்றத்தை ஏற்படுத்துவதாக, சீனா மீது இந்தியா குற்றஞ்சாட்டி வருகிறது.

இந்த நிலையில், பாரிஸில், பிரெஞ்சு சர்வதேச உறவு கழகத்தில் பேசிய வாங் யி, இந்தியாவுடனான கருத்து வேறுபாடுகளை கட்டுப்படுத்துவதுடன் அது மோதலாக மாறாமல் இருப்பதையும் உறுதிசெய்ய வேண்டும் எனதெரிவித்தார்.

இந்திய – சீன எல்லையில், பிரச்சினைக்குரிய பகுதிகளில் நிலைத்தன்மை தொடர வேண்டும் என்பதில் சீனா உறுதியாக இருப்பதாகவும் அவர் கூறினார்.

# எஸ்.பி. பாலசுப்பிரமணியத்தின் உடல்நிலை சீர் என அறிக்கை

சென்னை,செப்.01

“பாடகர் எஸ்.பி.பாலசுப்பிரமணியத்தின் உடல்நிலை சீராக உள்ளது. சுயநினைவுடன் இருக்கும் அவர், ‘பிசியோதெரபி’க்கு ஒத்துழைப்பு தருகிறார்” – என எம்.ஜி.எம். மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

கொரோனா பாதிப்புக்குள்ளான பிரபல திரைப்பட பின்னணி பாடகர் எஸ்.பி. பாலசுப்பிரமணியம், (வயது 75) சென்னை, எம்.ஜி.எம். ஹெல்த் கேர் மருத்துவமனையில் சிகிச்சையில் உள்ளார். அவரது உடல்



உறுப்புக்கள், சீராக இயங்கி வருகின்றன. நுரையீரல் செயல்பாட்டை இயல்பு நிலைக்கு கொண்டு வர, சிகிச்சை அளிக்கப்படுகிறது.

எம்.ஜி.எம்., மருத்துவமனை நேற்று வெளியிட்ட அறிக்கையில், ‘எஸ்.பி.பி., உடல்நிலை சீராக உள்ளது. சுயநினைவுடன் இருக்கும் அவர், ‘பிசியோதெரபி’க்கு ஒத்துழைப்பு தருகிறார்’ என, கூறப்பட்டுள்ளது.

எஸ்.பி.பி., மகன் சரண், நேற்று வெளியிட்ட வீடியோ பதிவு மருத்துவமனைக்கு சென்று, அப்பாவின் உடல்நிலை குறித்து கேட்டறிந்தேன். நுரையீரல் ’எக்ஸ் ரே’வை மருத்துவர்கள் காண் பித்தனர் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. நீண்ட நாள்களாக படுக்கையில் இருப்பதால், தசை வலிமை பெற, உடற்பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

அப்பா நன்றாக சுவாசிக்கிறார். அனைவரின் பிரார்த்தனைக்கும் விரைவில் பலன் கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது.” – இவ்வாறு, அவர் தெரிவித்துள்ளார்.

# ஓகஸ்டில் இந்தியாவிலேதான் கொரோனாத் தொற்று அதிகம்

## சுமார் 20 லட்சம் பேரைப் பீடித்தது

வேறு எந்த நாடுகளிலும் இல்லாத வகையில் உலகிலேயே அதிகபட்சமாக கடந்த மாதம் இந்தியாவில் சுமார் 20 லட்சம் பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

கடந்த மாதம் இந்தியாவில் 19 லட்சத்து 87 ஆயிரத்து 705 பேர் கொரோனா தொற்றுக்கு ஆளாயினர்.

இதற்கு முன்னர் அமெரிக்காவில் கடந்த ஜூலை மாதம் பதிவான 19 லட்சத்து நான்காயிரத்து 462 ஐ விடவும் இது அதிகமாகும்.

அதே போன்று கடந்த மாதம் இந்தியாவின் கொரோனா இறப்பு எண்ணிக்கையும் ஜூலை மாதத்தை விட 50 சதவிகிதம் அதிகரித்து 28,859 ஆக பதிவானது.

இறப்பு எண்ணிக்கையில் அமெரிக்காவும், பிரேசிலும் முறையே முதல் மற்றும் இரண்டாம் இடங்களில் உள்ளன.

# பிரணாப் முகர்ஜி படத்துக்கு பிரதமர், ஜனாதிபதி அஞ்சலி

இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி கொரோனாத் தொற்றுடன் உயிரிழந்த நிலையில் அவரின் புகைப் படத்திற்கு குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த், பிரதமர் மோடி அஞ்சலி செலுத்தினர்.

முன்னாள் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி, டெல்லியில் உள்ள ராணுவ ஆராய்ச்சி ஆஸ்பத்திரியில் கடந்த 10 ஆம் திகதி சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். மூளையில் கட்டியை அகற்ற ஆபரேஷன் செய்ததை தொடர்ந்து, அவர் கோமா நிலையை அடைந்தார். அவருக்கு கொரோனா பாதிப்பும், நுரையீரல் தொற்றும், சிறுநீரக கோளாறும் கண்டறியப்பட்டது.

இதற்கிடையே, டெல்லி ராணுவ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த முன்னாள் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி காலமானார்.

பிரணாப் முகர்ஜி மறைவுக்கு ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த், பிரதமர் மோடி உள்ளிட்ட பல்வேறு தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர். முன்னாள் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியின் மறைவுக்கு அரசு சார்பில் 7 நாள்கள் துக்கம் அனுசரிக்கப்படும் என மத்திய அரசு அறிவித்துள்ளது.

இன்று காலை டெல்லி ராஜாஜி மார்க்கில் உள்ள பிரணாப் முகர்ஜி இல்லத்தில், அவரது படத்திற்கு மலர் வளையம் வைத்து குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் மற்றும் பிரதமர் மோடி ஆகியோர் அஞ்சலி செலுத்தினர்.







# கொரோனா வழிகாட்டுதலுக்கு அமைய பிரணாப் முகர்ஜியின் பூதவுடல் தகனம்

மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜியின் உடல் டெல்லி லோதி மின் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. கொரோனா வழிகாட்டுதல் நடைமுறையில் உடல்தகனம் செய்யப்பட வேண்டும் என்பதால், அவரது உடல் இராணுவ வாகனத்திற்கு பதிலாக வானில் எடுத்துச் செல்லப்பட்டது.

இந்தியாவின் 13 ஆவது ஜனாதிபதியாக கடந்த 2012 ஆம் ஆண்டு முதல் 2017 வரை பதவி வகித்தவர் பிரணாப் முகர்ஜி (வயது 84). மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த இவர், பதவி ஓய்வுக்குப்பின் டெல்லியில் வசித்து வந்தார். இவர் கடந்த மாதம் 9 ஆம் திகதி தனது வீட்டில் தவறி விழுந்தார்.

இதில் அவரது மூளையில் ரத்தம் உறைந்தது. எனவே மறுநாள் டெல்லி ஆர்.ஆர். ராணுவ மருத்துவமனையில் ஆபத்தான நிலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு அவசர அவசரமாக உயிர் காக்கும் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. சுமார் 7 மணி நேரம் நடந்த அறுவை சிகிச்சையின் மூலம், பிரணாப்பின் மூளையில் இருந்த மிகப்பெரிய ரத்தக்கட்டி வெற்றிகரமாக அகற்றப்பட்டது.

முன்னதாக ஆஸ்பத்திரியில் பிரணாப் முகர்ஜிக்கு கொரோனா பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டது. இதில் அவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டிருந்தது உறுதி செய்யப்பட்டது. மூளையில் நடந்த அறுவை சிகிச்சைக்குப்பின் பிரணாப் முகர்ஜியின் உடல்நிலை மோசமடைந்தது. 22 நாட்களாக தீவிர சிகிச்சையில் இருந்த பிரணாப் முகர்ஜி நேற்று மாலை 4.30 மணியளவில் சிகிச்சை பலனின்றி மரணம் அடைந்தார்.

மாரடைப்பால் அவரது உயிர் பிரிந்ததாக டாக்டர்கள் தெரிவித்தனர். முன்னாள் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி மறைவுக்கு நாடு முழுவதும் 7 நாள்கள் துக்கம் அனுசரிக்கப்படுகிறது. பிரணாப் முகர்ஜி மறைவுக்கு ஜனாதிபதி, துணைஜனாதிபதி, பிரதமர், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி உள்பட பல்வேறு தலைவர்களும் இரங்கல் தெரிவித்தனர்.

பிரணாப் முகர்ஜியின் அதிகாரப்பூர்வ இல்லத்தில் அவரின் உடலுக்கு காலை 9.15 முதல் 10.15 வரை முக்கியப் பிரமுகர்கள் அஞ்சலி செலுத்தினர்.

கொரோனா வழிகாட்டுதல் நடைமுறையில் உடல் தகனம் செய்யப்பட வேண்டும் என்பதால், அவரது உடல் ராணுவ வாகனத்திற்கு பதிலாக வானில் எடுத்துச் செல்லப்பட்டது. பின்னர் லோதி மின் மயானத்தில் இராணுவ மரியாதையுடன் உடல் தகனம் செய்யப்பட்டது.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# அமெ. இராணுவ வாகனம் - கார் மோதல் தென்கொரியாவில் நான்கு பேர் மரணம்

தென்கொரியாவில் அமெரிக்க இராணுவ வாகனமும் காரும் மோதி விபத்துக்குள்ளானதில் 4 பேர் உயிரிழந்தனர்.

வடகொரிய எல்லையோரம் மலைத்தொடர் அருகே உள்ள போச்சியோன் நகரில் ரோட்ரிக்ஸ் வகை பீரங்கி வாகனம் மோதி கார் முற்றிலும் சேதமடைந்த நிலையில், அதில் பயணித்த 4 பேர் உயிரிழந்தனர் எனவும் இராணுவ வாகனச் சாரதி காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கார் சாரதி மதுபோதையில் இருந்தமையால் விபத்து நிகழ்ந்ததா என்ற கோணத்தில் விசாரணை நடந்து வருவதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.





# பூமியைக் கடந்து செல்கிறது ஒஸ்ட்ராய்ட் 2011 சிறுகோள்

## நாசா விஞ்ஞானிகள் விளக்கம்



ஒஸ்ட்ராய்ட் 2011 என்றழைக்கப்படும் சிறு கோள் இன்று பூமிக்கு நெருக்கமாகக் கடந்து செல்கிறது என நாசா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த முறை இந்த சிறுகோள் பூமியைக் கடந்து சென்ற போது நான்கு நாள்களுக்கு அதனைக் காண முடிந்தது. நிலவை விட பூமிக்கு அருகாமையில் கடந்து செல்வதால் அதனைக் காண முடிவதாக நாசா விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இந்த சிறுகோள் பூமியின் மீது மோதி ஆபத்து உண்டாகலாம் என்ற அச்சம் பரவியது.

ஆனால், அத்தகைய ஆபத்து ஏதுமில்லை என்றும் விஞ்ஞானிகள் விளக்கம் அளித்துள்ளனர். 45 ஆயிரம் மைல்கள் தூரத்தில் மிகவும் பாதுகாப்பான முறையில் இந்த சிறுகோள் பூமியைக் கடந்து செல்லும் என்றும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

# ஒக்ஸ்போர்ட் பல்கலை கொரோனாத் தடுப்பூசியின் இறுதிக் கட்ட சோதனை அமெரிக்காவில் ஆரம்பம்

பெரிதும் எதிர்பார்க்கப்படும் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக கொரோனா தடுப்பூசியின் இறுதிக்கட்ட சோதனை அமெரிக்காவில் தொடங்கி உள்ளது.

புரீம்1222 என்று பெயரிடப்பட்டுள்ள இந்தத் தடுப்பூசியைப் பிரபல மருந்து நிறுவனமான ஆஸ்ட்ரா ஜெனகா தயாரிக்க உள்ளது.

அமெரிக்காவில் 80 இடங்களில் சுமார் 30 ஆயிரம் பேரிடம் இந்தத் தடுப்பூசியின் இறுதிக்கட்ட சோதனை நடக்கும் என தகவல் வெளியாகி உள்ளது.

கடந்த வெள்ளை மாளிகை செய்தியாளர் சந்திப்பில் இந்த தகவலை உறுதி செய்த அதிபர் ட்ரம்ப், தடுப்பூசி கண்டுபிடிக்க வழக்கமாக பல ஆண்டுகள் தேவைப்படும் நிலையில், தமது நிர்வாகம் சில மாதங்களிலேயே அதை சாதித்து விட்டதாகக் கூறினார்.

வரும் நவம்பரில் நடக்க உள்ள அமெரிக்க அதிபர் தேர்தலுக்கு முன்னரே தடுப்பூசி பயன்பாட்டுக்கு வந்து விடும் எனவும் அவர் தெரிவித்தார்.

# கொரோனாவைக் கட்டுப்படுத்தாமல் தளர்வுகளை அறிவிப்பது ஆபத்து

## உலக சுகாதார ஸ்தாபனம்

ஜெனீவா,செப்.01

கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்தாமல் தளர்வுகளை அறிவிப்பது ஆபத்தானது என உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

சீனாவின் உகான் நகரில் கடந்த ஆண்டு இறுதியில் கண்டறியப்பட்ட கொரோனா வைரஸ் உலக நாடுகளை உலுக்கிவருகிறது. வைரஸ் முதன்முதலில் வெளிப்பட்டு ஏறத்தாழ 9 மாதங்கள் ஆகியுள்ள போதிலும், வைரஸ் தொற்றுப் பரவல் பல நாடுகளில் இன்னும் உச்சகட்டமாக உள்ளது.

கொரோனாத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் முதலில் ஊரடங்கு கட்டுப்பாடுகள் கொண்டு வந்த நாடுகள், பொருளாதாரம் மற்றும் மக்களின் வாழ்வாதாரத்தைக் கணக்கில் கொண்டு தளர்வுகளை அறிவித்துத் திறந்து விட்டன. இந்தியாவிலும் ஊரடங்குத் தளர்வுகள் படிப்படியாக அறிவிக்கப்பட்டு வருகிறது.




இந்த நிலையில், கொரோனா வைரஸ் தொற்று பரவலைக் கட்டுப்படுத்தாமல் கட்டுப்பாடுகளைத் தளர்த்தி திறந்து விடுவது பேரழிவிற்கான செயல் என்று உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை விடுத்துள்ளது. இது குறித்து உலக சுகாதார ஸ்தாபனத்தின் இயக்குநர் டெட்ரோஸ் ஆதனோம் கேப்ரியேசுஸ் கூறுகையில் –

பெருந்தொற்று முடிவுக்கு வந்துவிட்டதாக எந்த நாடும் சொல்ல முடியாது. உண்மை என்னவெனில் இந்த வைரஸ் மிக எளிதாகப் பரவும். எனவே, கொரோனாவைக் கட்டுப்படுத்தாமல், திறந்து விடுவது என்பது பேரழிவிற்கான செயலாகும். மக்கள் அதிக அளவு கூடும் இடங்களில் இருந்தே பெரிய அளவில் தொற்றுப் பரவல் ஏற்படுகிறது – என்றார்.

# போராட்டக்களத்தில் மலர்ந்த காதல் முத்தமிட்டு சம்மதம் சொன்ன பெண்!

## பெலாரஸில் நடந்த சுவாரஸ்யம்



பெலாரஸில் அதிபர் அலெக்சாண்டர் லுகாஷென்கோ பதவி விலக வலியுறுத்தி நடைபெற்ற போராட்டத்துக்கு இடையே பெண்ணிடம் போராட்டக்காரர் ஒருவர் திருமணம் செய்துகொள்ள காதல் ஆசையை வெளியிட்ட சுவாரஸ்ய நிகழ்வு அரங்கேறியது.

கிழக்கு ஐரோப்பாவில் உள்ளது பெலாரஸ். 1922 ஆம் ஆண்டில் ரஷ்யப் புரட்சியின் போது விடுதலை பெற்று சுதந்திர நாடானது. இங்கு, கடந்த 9 ஆம் திகதி நடைபெற்ற அதிபர் தேர்தலில் 6 ஆவது முறையாக அலெக்சாண்டர் லுகான்கோ அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்தத் தேர்தலில் மிகப் பெரிய அளவில் மோசடி நடந்துள்ளது என்று ஆயிரக்கணக்கானோர் போராட்டம் செய்து வருகிறார்கள்.

இந்த நிலையில், தலைநகர் மின்ஸ்க்கில் நடைபெற்ற போராட்டக்களத்தில் பெண் ஒருவரிடம் போராட்டக்காரர் ஒருவர் திருமணம் செய்துகொள்ளும் நோக்கில் மண்டியிட்டு தனது காதலை வெளிப்படுத்தினார். இதை சற்றும் எதிர்பார்க்காத அந்தப் பெண் இன்ப அதிர்ச்சியில் திக்குமுக்காடிப்போய் கண்கள் கலங்கியபடி, போராட்டக்காரரின் காதலை ஏற்றுக்கொண்டார். சுற்றிலும் திரண்டிருந்த போராட்டக்காரர்கள் கைதட்டி ஆரவாரமிட புதுக்காதலர்கள் இருவரும் கட்டியணைத்து முத்தமிட்டுக் கொண்டனர்..!

# மொன்டனேக்ரோவில் ஆளும் கட்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் போராட்டம்



ஐரோப்பிய நாடான மொன்டனேக்ரோவில் ஆளும் கட்சியைக் கண்டித்து பிரமாண்டமான பேரணி நடத்தப்பட்டது.

அங்கு நடைபெற்ற தேர்தலில் அதிபர் மிலோ ஜுகானோவிச்சின் மேற்கத்திய சார்பு கட்சி பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ளது. ஆனால் சிறு கட்சிகளுடன் கூட்டணி அமைத்து மீண்டும் ஆட்சியமைக்க அது முயற்சி செய்வதாகக் கூறப்படுகிறது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்க்கட்சியினரும், பொதுமக்களும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தலைநகர் போட்கோரிகாவில் நடந்த போராட்டத்தின் போது நெருப்பைப் பற்றவைத்து போராட்டம் நடத்தியதால் அப்பகுதி முழுவதும் புகை மண்டலமாகக் காட்சியளித்தது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# திருகோணமலை நகரில் இளைஞன் திடீர் மரணம்

திருகோணமலை, செப். 01

திருகோணமலை நகரத்தின் துறைமுகப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று மாலை இளைஞர் ஒருவர் திடீரென்று மரணம் அடைந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் மனையாவெளியை அண்மித்த பகுதியைச் சேர்ந்த அன்பழகன் தனூசியன் (19) எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வவுனியாவிலிருந்து சக உறவினர்கள் திருகோணமலைக்கு சுற்றுலா வருகை தந்திருந்த போது அதில் வந்த ஒருவர் தொலைபேசியில் சந்தோசமாக உரையாடிக் கொண் டிருந்துள்ளார்.

பின்னர் திடீரென தொலைபேசி துண்டிக்கப்பட்டதாகவும், இதனையடுத்து அவரது வீட்டுக்கு அருகே சென்ற போது இளைஞன் விழுந்து கிடந்தமையை அவதானிக்க முடிந்ததாகவும் கூறப்பட்டது. அதனை அடுத்து இளைஞனை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர் எனவும் உறவினர் ஒருவர் தெரிவித்தார்.

உயிரிழந்த இளைஞரின் சடலம் தற்பொழுது திருகோணமலை பொது வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. பிரேத பரிசோதனை இன்று இடம்பெறவுள்ளதாக வைத்தியசாலையின் வைத்தியர் ஒருவர் தெரிவித்தார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை துறைமுக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நாட்டின் கல்வி மற்றும் தொழிற் கல்வி அபிவிருத்திக்கு உதவ சீனா இணக்கம்



கொழும்பு, செப். 01

நாட்டின் கல்வி மற்றும் தொழிற் கல்வி அபிவிருத்தி, அம்பாந்தோட்டை மாவட்டத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள கைத்தொழில், மற்றும் டயர் தொழிற்சாலை செயற்றிட்டங்களில் உதவுவதற்கு சீனா இணக்கம் தெரிவித்துள்ளது.

சீனத் தூதுவர் ஹுவெய்க்கும் கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸுக்குமிடையில் இடம்பெற்ற பேச்சுகளின்யின்போதே இந்த இணக்கம் எட்டப்பட்டுள்ளது.

மேற்படி பேச்சின் போது நாட்டின் கல்வித் துறை மற்றும் தொழிற்கல்வி ஆகியவற்றில் அபிவிருத்தியை மேற்கொள்ளும் வகையில் மேற் கொள்ள வேண்டிய வேலைத் திட்டங்கள் தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

நாட்டின் கல்வி அபிவிருத்தி தொடர்பில் கல்வி அமைச்சு மேற்கொள்ளும் செயற்திட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நீண்ட கால வேலைத் திட்டங்கள் தொடர்பில் சீன அரசாங்கம் எவ்வாறு உதவ முடியும் எனவும் இங்கு கலந்துரையாடப்பட்டுள்ளது.

குறிப்பாக பாடசாலைக் கல்வி, உயர் கல்வி, தொழிற் கல்வி ஆகிய துறைகளை அபிவிருத்தி செய்வதற்கு சீன அரசிடமிருந்து இலங்கை அரசாங்கம் எதிர்பார்க்கும் ஒத்துழைப்பு தொடர்பில் இதன்போது அமைச்சர் ஜி. எல். பீரிஸ் தெளிவுபடுத்தியுள்ளார்.

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் உத்தேச திட்டமான கைத்தொழில் மற்றும் முதலீட்டு வலயங்களில் மருந்து உற்பத்தி மற்றும் டயர் தொழிற்சாலை உள்ளிட்ட அபிவிருத்தி செயற்றிட்டம் தொடர்பிலும் அதற் கான மனித வள விருத்தியை மேம்படுத்துவது தொடர்பிலும் இங்கு கவனம் செலுத் தப்பட்டுள்ளது.

அபிவிருத்தி வேலைத் திட்டங்களைத் துரிதமாக முன்னெடுத்துச் செல்வதற்காக நிர்மாணத்துறை மற்றும் வளங்கள் துறையின் திறனபிவிருத்தி அவசியம் தொடர்பில் அமைச்சர் இங்கு சுட்டிக்காட்டியுள்ளார்.

அது தொடர்பில் இருவருக்கிடையில் இணக்கம் ஏற்பட்டுள்ள நிலையில், எதிர்வரும் சில மாதங்களில் அது தொடர்பான துரித நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் உடன்பாடு காணப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்குமிடையிலான புரிந்துணர்வு மற்றும் ஒத்துழைப்புக்களை பலப்படுத்துவது தொடர்பில் செயற்படுவதற்கு தாம் விருப்பமாக உள்ளார் என சீனத் தூதுவர் இதன் போது தெரிவித்துள்ளார். அதன் அடுத்த கட்ட நடவடிக்கையான வீடியோ கலந்துரை யாடல் மூலம் மேலும் விடயங்கள் தொடர்பில் பேச்சு நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்குமிடையிலான ஒத்துழைப்புக்களை வலுப்படுத்தும் வகையில் இரு தரப்பு அதிகாரிகளுக்கிடையில் இணைப்புக்களை ஏற்படுத்துவது தொடர்பிலும் இங்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

# போதை மாத்திரைகள், கஞ்சாவுடன் வாழைச்சேனையில் இளைஞர் கைது!



வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலைநகர் பிரதேசத்தில் போதை மாத்திரைகள் மற்றும் கேரளா கஞ்சாவுடன் இளைஞர் ஒருவர் திங்கட்கிழமை காலை கைது செய்யப்பட்டுள்ளார் என வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பதில் பொறுப்பதிகாரி விஜயவீர தெரிவித்தார்.

வாழைச்சேனை பொலிஸ் போதை தடுப்பு பிரிவு பொலிஸ் உத்தியோகத்தர் எம்.பி.எம்.தாஹாவுக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து போதை தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஜே.எம்.துசிதகுமார தலைமையில் பொலிஸ் இன்ஸ்பெக்டர்களான ஜி.ஐ.புஸ்பகுமார, எஸ். வாசல, எம்.பி.எம்.தாஹா ஆகியோர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது பாலைநகரைச் சேர்ந்த 28 வயதுடைய இளைஞர் கைது செய்யப்பட்டார். அந்த இளைஞனிடம் இருந்து 1538 போதை மாத்திரைகள், 2000 மில்லி கிராம் கேளரா கஞ்சா மற்றும் 20 கிராம் ஹெரோயின் என்பவற்றினை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர் என வாழைச்சேனை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி விஜயவீர மேலும் தெரிவித்தார்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் சட்டவிரோத செயல்கள் இடம்பெற்று வரும் நிலையில், போதைப் பொருள் பாவனையினை இல்லாமல் செய்வதற்காக வாழைச்சேனை பொலிஸ் நிலைய பெறுப்பதிகாரி தனஞ்ஜய பெரமுளவின் வழிகாட்டலில் பல்வேறு வேலைத் திட்டங்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மின்கம்பம் கப் மீது விழுந்ததில் ஒரே குடும்பத்தில் 4 பேர் காயம்



கல்முனை -O. பெரியநீலாவணை விஷ்ணு கோவிலுக்கு அருகில் மின்கம்பம் ஒன்று நேற்று மாலை ஏற்பட்ட அதிவேக காற்று காரணமாக குடைசாய்ந்து சிறிய ரக கப் வாகனம் மீது விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்து காரணமாக கப் வாகனத்தில் பயணித்த தாய்,தந்தை மற்றும் இரு பிள்ளைகள் பலத்த காயங்களுடன் கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

அதேவேளை, அப்பகுதியில் போக்குவரத்து நெரிசல் சிறிது நேரம் ஏற்பட்டதாகப் போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளதாக கல்முனை மின்சார சபையின் உத்தியோகத்தர் தெரிவித்தார்.

# ஒரு லட்சம் பேருக்கு அரச வேலைவாய்ப்பு; வேலைத்திட்டம் நாளை தொடங்குகின்றது

கொழும்பு, செப். 01

இலங்கையில் குறைந்த வருமானம் பெறும் ஒரு லட்சம் குடும்பங்களுக்கு தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொடுக்கும் வேலைத்திட்டம் நாளை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தினால் ஸ்தாபிக்கப்பட்டுள்ள பல்துறை அபிவிருத்தி செயலணி மூலம் குறைந்த வருமானம் பெறும் மற்றும் தேர்ச்சி பெறாதவர்களை பொருளாதார ரீதியாக பலப்படுத்துவதே இந்த செயற்றிட்டத்தின் நோக்கம் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த செயற்றிட்டத்தின் கீழ், 18 முதல் 40 வயதுக்கு இடைப்பட்டவர்கள் விண்ணப்பிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வித கல்வித்தகைமையும் இல்லாத அல்லது கல்வி பொது தராதர சாதாரண தரத்தை விடவும் குறைந்த கல்வி தரத்தை கொண்டவர்களும் விண்ணப்பிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சமுர்த்தி நிவாரணம் பெறுவதற்கு தகுதியிருந்தும் பெறாத குடும்பத்தின் தொழிலற்ற உறுப்பினராக இருத்தல் அல்லது சமுர்த்தி நிவாரணம் பெறுகின்ற குடும்பத்தில் தொழிலற்ற உறுப்பினர்களாக இருப்பவர்களும் விண்ணப்பிக்க முடியும் என மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, வயது முதிர்ந்த நோயாளியான பெற்றோர் அல்லது ஊனமுற்ற உறுப்பினரைக் கொண்ட குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் விண்ணப்பிக்க முடியும்.

அத்துடன் விண்ணப்பதாரி விண்ணப்பிக்கும் பிரதேசத்தில் நிலையான வசிப்பிடத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

6 மாதங்களுக்கு தொடர் பயிற்சி காலத்தில் பயிற்சியை நிறைவு செய்த பின்னர் தாம் பயிற்சி பெற்ற துறையில் தமது நிலையான வதிவிட பிரதேசத்தில் அல்லது அண்மித்த பகுதிகளில் தொழில் வாய்ப்பு வழங்கப்படும் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

10 வருட காலம் சிறப்பான தொடர் சேவைக் காலத்தை நிறைவு செய்ததன் பின்னர் அரசின் ஓய்வூதியம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட வரையறைகளுக்குள் மாத்திரமே இந்த தொழில் வாய்ப்பு வழங்கப்படும் என்பதுடன், தொழில் பெறுவோர் எந்தவொரு தரப்பினருக்கும் பணம் அல்லது லஞ்சம் வழங்குதல் தொழில் வாய்ப்பு நிராகரிக்கப்பட காரணமாக அமையலாம் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விக்கியை உடனே கைது செய்யுங்கள்!

## நவ சிங்கள ராவய சீற்றம்

புலிகளின் பிரிவினைவாத நிகழ்ச்சி நிரலை முன்னெடுக்கும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் விக்னேஸ்வரனை உடனடியாக கைது செய்யவேண்டும் என்று நவ சிங்கள ராவய அமைப்பின் பொதுச் செயலாளர் மாகல்கந்தே சுதந்த தேரர் வலியுறுத்தினார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறியதாவது:-

அரசியல் இலாபத்துக்காக இனவாதத்தை தூண்டும் நடவடிக்கையில் விக்னேஸ்வரன் ஈடுபட்டுள்ளார். அவரின் இந்த முயற்சியை தோற்கடிப்பதற்கு அனைத்து மக்களும் ஓரணியில் திரளவேண்டும்.

"அதுமட்டுமல்ல விக்னேஸ்வரனை உடனடியாக கைது செய்து வாக்குமூலம் பதிவுசெய்யவேண்டும். நாடாளுமன்றத்துக்குள் மட்டுமல்ல வெளியிலும் அவர் சர்ச்சைக்குரிய கருத்துக்களை வெளியிடுகின்றார்.



"புலிகளின் பிரிவினைவாத முகாமையே அவர் பிரதிநிதித்துவப்படுத்துகிறார். அவரின் அறிவிப்புக்களை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். - என்றார்.

## கள்ள நோட்டு அச்சிடும் நிலையம் சுற்றிவளைப்பு

போலி நாணயத்தாள்களை தம் வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வீரகெட்டிய, ஹூன்னகும்புர பகுதியில் வைத்து இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரிய வருபவை வருமாறு:-

மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த நபர் ஒருவரைப் பொலிஸார் சந்தேகத்தின் பெயரில் சோதனையிட்ட போது அவரிடமிருந்து 5,000 ரூபா போலி நாணத்தாள்கள் 200 கைப்பற்றப்பட்டது. அதனையடுத்து அந் நபர் கைது செய்யப்பட்டார்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் வீரகெட்டிய, உடயால பகுதியில் இருந்த போலி நாணயத் தாள்களை அச்சிடும் நிலையம் ஒன்றை சுற்றி வளைத்து மற்றுமொரு நபரைப் பொலிஸார் கைது செய்தனர். அந்த இடத்தில் இருந்து போலி நாணயத் தாள்களை அச்சிடப் பயன்படுத்திய கணனி மற்றும் பிரிண்டர் ஒன்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் 27 மற்றும் 39 வயதுடையவர்கள் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர்

## மின்தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வவுனியாபிரதேசத்தில் பூவரசங்குளப் பிரதேசத்தில் நாளை புதன்கிழமை காலை 8.00 மணி யிலிருந்து மாலை 05.00 மணிவரையும்

**நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 08.00 மணியிலிருந்து மாலை 05.00 மணிவரை -**

**யாழ் பிரதேசத்தில் -**

மண்கும்பான், மண்கும்பான் விடுதி, தேசிய நீர்வழங்கல் வடிகால் சபை, அல்லைப்பிட்டி, அல்லைப்பிட்டி தேவாலயம், வெண்புரவிநகர், பூம்புகார், மண்டைதீவு, மண்டைதீவு கடற்படை முகாம் ஆகிய இடங்களிலும்,

**வவுனியா பிரதேசத்தில் -**

தாண்டிக்குளத்திலிருந்து கீரிசுட்டான் வரை, மறக்கறம்பளையிலிருந்து மணிபுரம் வரை, இரணையிலுப்பைக்குளத்திலிருந்து சின்னவலயங்கட்டு வரை, நொதேர்ண் பண்ணை, புதுக்குளம் நீர்ப்பாசன சபை, ICT மறக்கறம்பளை சமயபுரம் வரண் அரிசி ஆலை, தாண்டிக்குளம் நீர்ப்பாசன சபை, புதிய பேரூந்து தரிப்பிடம், பூவரசங்குளம், ஆண்டியப்புளியங்குளம், பூவரசங்குளத்திலிருந்து வாரிக்குட்டியூர் வரை ஆகிய இடங்களிலும்,

**மன்னார் பிரதேசத்தில் -**

கொக்குபடையான், கொண்டாச்சி கிராமம், மறிச்சுக்கட்டி, முள்ளிக்குளம், கரடிக்குழி, பாலக்குழி, முள்ளிக்குளம் கடற்படை முகாம், துருக்கி நகரம், தாராபுரம் ஆகிய பிரதேசங்களிலும் மின்விநியோகம் தடைப்படும் என்று மின்பொறியிலாளர் அறிவித்துள்ளார்.

## சட்டவிரோதமாக நுழைந்தோர் குறித்து வவுனியாவில் எச்சரிக்கைச் சுவரொட்டிகள்

நாட்டிற்குள் பிரவேசித்து வவுனியாவில் தங்கியுள்ளவர்கள் தொடர்பில் உடன் தகவல் வழங்குமாறு பொலிஸார் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கொரோனா பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பொலிஸார் இந்த வேண்டுகோளை விசேட சுவரொட்டிகள் மூலம் விடுத்துள்ளனர்.

காய்ச்சல், வரட்டு இருமல், சளி, மூச்சுத் திணறல் இருக்கும் நபர்கள் கொரோனா தொற்றுடையவர்களாக இருக்கலாம் எனவும் எனவே அவர்களிடமிருந்து அவதானமாக இருக்குமாறும் குறித்த சுவரொட்டிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் சந்தேகத்திற்கிடமான நபர்களை தங்கவைத்தல், பாதுகாப்பளித்தல், போக்குவரத்திற்காக உதவியளித்தல், மறைந்திருந்திருப்பதற்காக உதவி புரிதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்குறித்த விடயங்கள் தொடர்பாக தகவல் கிடைத்தால் உடனடியாக பொலிஸாருக்கு தெரிவித்தல் வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக 199 அல்லது 1933 அல்லது 011 2444480 அல்லது 011 2444481 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பினை ஏற்படுத்துமாறும் அல்லது 071 - 8558875 என்ற வட்சப் இலக்கத்துக்கு அழைப்பினை மேற்கொள்ளுமாறு பொலிஸாரினால் ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சுவரொட்டிகள் வவுனியா நகர், புதிய பேருந்து நிலையம் போன்ற பல பொது இடங்களில் பரவலாக ஒட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கொட்டகலை பிரதான நகரில் தொடர்பாடல் நிலையம் சூறை

திம்புள்ள பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டகலை பிரதான நகரில் அமைந்துள்ள கொமினிகேசன் (தொடர்பாடல்) கடையினை உடைத்துப் பணம் மற்றும் தொலைபேசி மீள்நிரப்பு அட்டைகளைக் கொண்டு சென்றுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் இன்று அதிகாலை 2.20 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தின் போது ஒரு லட்சத்து பத்தாயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட பணம் மற்றும் மீள் நிரப்பு அட்டைகள் சூறையாடப்பட்டுள்ளன என்பது பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பகட்ட விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது.

சம்பந்தப்பட்ட நபர் கோயில் பக்கமாக வந்து பூட்டை இரும்பு கம்பியால் உடைத்து பணம் மற்றும் மீள் நிரப்பும் அட்டைகளை எடுத்துச்செல்லும் காட்சிகள் அந் நிறுவனத்தில் பொருத்தப்பட்டிருந்த சிசிடிவிகமராவில் பதிவாகியுள்ளன.

அண்மைக் காலமாக கொட்டகலை பகுதியில் இதுபோன்ற பல்வேறு சம்பவங்கள் பதிவாகியுள்ள போதிலும் அவை தொடர்பில் எவரும் இதுவரை கைது செய்யப்படாமையினால் மக்கள் மத்தியில் அச்ச நிலை நீடிக்கின்றது.

இன்றைய திருட்டுச் சம்பவம் குறித்து திம்புள்ள பத்தனை பொலிஸார் மற்றும் நுவரெலியா கைரேகை அடையாளப்பிரிவினர் இணைந்து சம்பவத்துடன் தொடர்புடையவர்களைப் பிடிப்பதற்கு விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## பலாங்கொடவில் ஆழுங்கட்டி மழை

பலாங்கொட - வெலிஒய நகரத்திற்கு அருகிலுள்ள பகுதிகளில் நேற்றையதினம் ஆழுங்கட்டி மழை பெய்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

ஒரு மாதகால வறட்சியின் பின் நேற்று அந்தப் பகுதியில் மழை பெய்துள்ளது. இதன் போது ஆழுங்கட்டிகள் கொட்டின எனவும் இது வரையான காலப்பகுதியில் இப்போதுதான் ஆழுங்கட்டி மழையைத் தாம் பார்க்கின்றனர் எனவும் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

# வவுனியாவில் ஆலங்கட்டி மழையுடன் திடீரெனத் தாக்கியது மினி சூறாவளி!

## 55 குடும்பங்களைச் சேர்ந்த 154 பேர் பாதிப்பு

(கி.வசந்தரூபன்)

வவுனியாவில் கடும் காற்றுடன் கூடிய ஆலங்கட்டி மழையினால் 55 குடும்பங்களைச் சேர்ந்த 154 பேர் பாதிப்படைந்துள்ளனர் என மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

நேற்றுப் பிற்பகல் வவுனியாவில் ஆலங்கட்டி மழை பெய்ததுடன், சில பகுதிகளில் கடும் காற்றும் வீசியது.

வவுனியா மாவட்டத்தின் கணேசபுரம், சமயபுரம், நெளுக்குளம் ஆகிய பகுதியில் வீசிய கடும் காற்று காரணமாக 55 குடும்பங்களைச் சேர்ந்த 154 பேர் பாதிப்படைந்துள்ளனர். அத்துடன் 5 வீடுகள் முழுமையாக சேதமடைந்துள்ளன. 50 வீடுகளின் கூரைகளும் காற்றினால் தூக்கி வீசப்பட்டுள்ளன. மேலும், இரு ஆலயங்களின் கூரைப்பகுதியும் சேதமடைந்துள்ளன. வீதியோரங்கள், வீடுகளில் நின்ற பயன்தரு மரங்கள் பலவும் முறிந்து வீழ்ந்துள்ளன.

இந்நிலையில், பாதிப்படைந்த மக்களுக்கான இழப்பீடுகளை வழங்குவதற்கும், அவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குவதற்கும் மாவட்ட செயலகம் ஊடாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ - 100)





# ரூ. ஒரு கோடியே 70 இலட்சம் பெறுமதியான சிகரெட்டுகள் ஆடைப் பெட்டிக்குள் சிக்கின



## போலி விலாச நிறுவனத்தின் பெயரில் இறக்குமதி

கொழும்பு, செப். 01

ஆடைப் பெட்டிகளுக்குள் சூட்சுமமாக வைத்து பொதி செய்யப்பட்ட நிலையில் காணப்பட்ட ரூபா ஒரு கோடியே 70 இலட்சம் பெறுமதியான சிகரெட்டுகளை சுங்கத் திணைக்களம் கைப்பற்றியுள்ளது.

டுபாயிலிருந்து கடந்த ஆகஸ்ட் 06ஆம் திகதி வந்த ஷீஸி 123 எனும் விமானத்தில் இறக்குமதி செய்யப்பட்டிருந்த 12 பெட்டிகள், கட்டுநாயக்க விமான நிலைய வளாகத்தில் (Air Cargo Village, Katunayake) வைத்து, கடந்த வெள்ளிக்கிழமை (28) சோதனை செய்தபோது, 1,420 கார்ட்டன் சிகரெட் பெட்டிகளில் 2 இலட்சத்து 84 ஆயிரம் சிகரெட்டுகள் மீட்கப்பட்டுள்ளன என்று சுங்கத் திணைக்களத்தின் உதவிப் பேச்சாளர் சுங்க அத்தியட்சகர் லால் வீரகோன் தெரிவித்தார்.

குறித்த 12 பெட்டிகளில், தைத்த ஆடைகளுடன் பொதி செய்யப்பட்ட நிலையில் சிகரெட்டுகள் மீட்கப்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் கூறினார்.

# வவுனியாவில் வீடு புகுந்து ஓட்டோ எரிப்பு முல்லைத்தீவில் காருடன் இருவர் கைது




வவுனியா, பண்டாரிக்குளம் பகுதியில் வீடு ஒன்றுக்குள் புகுந்து அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஓட்டோவுக்குத் தீ வைத்தமை தொடர்பில் காருடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இன்று இந்த இருவரும் முல்லைத்தீவு பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர். இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:-

வவுனியா, பண்டாரிக்குளம், மாடசாமி கோவில் வீதியில் உள்ள வீடு ஒன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஓட்டோ மற்றும் மோட்டர் சைக்கிள் என்பன நேற்று அதிகாலை 3 மணியளவில் தீயில் எரிந்துள்ளன. தமது வாகனங்கள் தீயில் எரிவதை அவதானித்த வீட்டு உரிமையாளர் தீயை அணைக்க முயன்ற நிலையில் ஓட்டோ முழுமையாக எரிந்து நாசமாகியுள்ளதுடன், மோட்டார் சைக்கிள் சிறிய சேதத்துடன் மீட்கப்பட்டது.

இது தொடர்பில் வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரிடம் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாக வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மானமடு அவர்களின் வழிப்படுத்தலில் பெரும் குற்றத் தடுப்பு பிரிவு பிரதான பொலிஸ் பரிசோதகர் தாமசிறி தலைமையில், உதவிப் பொலிஸ் பரிசோதகர் ரஞ்சித் திசாநாயக்கா, பொலிஸ் சார்ஜன்ட்களான பந்துல (12515), விக்கிரமசிங்க (36099), திசாநாயக்கா (37348), சுமனசேனர (33088), குமார (722287), எக்கநாயக்கா (68694) ஆகியோர் அடங்கிய பொலிஸ் குழுவினர் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து இருந்தனர்.

இதனடிப்படையில் விரைந்து செயற்பட்ட பொலிஸார் இந்த சம்பவம் தொடர்பில் கார் ஒன்றுடன் முல்லைத்தீவு பகுதியைச் சேர்ந்த இருவரை கைது செய்துள்ளனர்.

குடும்பப் பிரச்சினை காரணமாக இச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளதாகத் தெரிவித்துள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். அத்துடன் கைது செய்யப்பட்ட இரு சந்தேக நபர்களையும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

(உ - 100)

# நாட்டின் பல பகுதிகளிலும் பரவலாக மழை பெய்வதற்கான காலநிலையாம்

நாட்டின் பல பகுதிகளில் 100 மில்லிமீற்றர் வரையான மழை வீழ்ச்சி பதிவாகும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் இன்று பிற்பகல் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே, இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, ஊவா, கிழக்கு, மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களின் சில பகுதிகளில் 100 மில்லி மீற்றர் வரையான மழை வீழ்ச்சி பதிவாகக் கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

அத்துடன், மேல், வட மேல் மற்றும் தென் மாகாணங்களின் சில பகுதிகளில், நாளைய தினம் 75 மில்லிமீற்றர் வரையான மழை வீழ்ச்சி பதிவாகக் கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், வட மத்திய, வடமேல் மாகாணங்களிலும், ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலும் 40 கிலோமீற்றர் வரையான வேகத்தில் காற்றுவீசக் கூடும் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இதற்கமைய, அனர்த்தங்கள் மற்றும் மின்னல் தாக்கங்களில் இருந்து பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு, மக்கள் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மதுரங்குளி, தலகஸ்வெவ, ஹூனுகல்லேவ, மன்னம்பிட்டிய மற்றும் கல்குடா ஆகிய பகுதிகளில், நாளை மதியம் 12.09 அளவில், சூரியன் உச்சம் கொடுக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

# செல்வச்சந்நிதி வளாகத்தில் இரு பெண்கள் கைதாகினர்

யாழ்ப்பாணம், செப். 01

யாழ்.தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலய தேர் திருவிழாவில் சங்கிலி அறுத்தவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் இரு பெண்கள் ஆலய வளாகத்தில் பாதுகாப்பு கடமையில் இருந்த பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தப் பெண்கள் ஆலய திருவிழாக்களில் திருடும் நோக்கில் வெளிமாவட்டங்களில் இருந்து வந்திருக்கலாம் என சந்தேகிக்கும் பொலிஸார், அவர்களுடன் வந்த மேலும் சிலர் இருக்கலாம் எனச் சந்தேகிக்கின்றமையுடன் அந்த கோணத்தில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர் எனக் கூறப்படுகிறது.









ஈழத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க வடமராட்சி தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தின் வருடாந்தத் தேர்த்திருவிழா இன்று வெகு விமரிசையாக நடைபெற்றது.

காலை 8 மணியளவில் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் 'அரோஹரா' கோசத்துடன் வடம் பிடித்திழுக்க ஆற்றங்கரையான் தேரேறி வலம் வந்த காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

அடியார்களின் இன்னல்களை அழிக்கும் அன்னதானக் கந்தன் அலங்காரத்துடன் இரதோற்சவத்தில் வலம் வந்த காட்சிகளைப் படங்களில் காணலாம்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.09.2020 இல் வெளியிடப்பெற்றது.